**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை**

-----------------------------------------------------

**யாழ்ப்பாணம் மாவட்டம்**

-------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 02 மார்ச் 2018 இல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 30 செப்தெம்பர் 2018 இல் தவிசாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்குப் பின்பற்றப்பட்டிருந்த கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்குரித்தான 32 பரப்பு விஸ்தீரணமுடைய இந்து மயானக் காணியில் வெளித்தரப்பினர்களின் அத்துமீறிய குடியமர்வு மற்றும் சபையினால் ரூபா 3,242,600 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட 60 பரப்பு விஸ்தீரணமுடைய வலிநுங்கை காணியின் உரிமைத்தன்மை தொடர்பில் மாவட்ட நீதிமன்றில் கடந்த 15 வருடங்களாக வழக்கு இடம்பெற்று வருவது அவதானிக்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பிலான விடயங்கள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்கு உரித்தற்ற 12 ஆதனங்களின் பெறுமதி கூட்டுமொத்தம் ரூபா 13,775,306 நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டமையால் காணி கட்டடங்களின் பெறுமதி மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது.

(ஆ) சபைக்கு உரித்தான காடாப்புலம் ஆதனத்தின் பெறுமதி ரூபா 4,508,825 நிதிக்கூற்றுக்குளக்குக் கொண்டுவரப்பட்டிருக்காமையால் உள்ளடக்கப்படாமையால் காணி கட்டடங்களின் பெறுமதி மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் குறைத்துக்காட்டப்பட்டுள்ளது.

(இ) சபைக்கு உரித்தான 09 வாகனங்களின் பெறுமதிகள் மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படாமையினால் மோட்டார் வாகனங்களின் வண்டிகளினதும் பெறுமதிகள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் குறைத்துக்காட்டப்பட்டுள்ளது.

### 1.3.3 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் பிரிவு 158(1) | 10,031,741 | ஆதனவரி நிலுவை செலுத்தத் தவறியோருக்கு சபையின் செயலாளரினால் பற்றாணைச்சீட்டு வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்கு விதிகள் நிதி ஒழுங்கு விதி 571 | 127,500 | 56 காலங்கடந்த கேள்வி வைப்புக்கள் தொடர்பில் சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் கடந்த 02 தொடக்கம் 07 ஆண்டுகளாக எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | வடக்கு மாகாண நிதி சுற்றுநிருபம் 07 மார்ச் 2017 இன் PE/01/2017 ஆம் இலக்கம் | | ஐந்து உத்தியோகத்தர்களிடம் பிணைப்பணம் பெறப்பட்டிருக்க வில்லை. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் ரூபா 45,367,037 தொகையான மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 50,399,647 தொகையாக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம்,உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரிகள் | 2,615,000 | 2,535,003 | 2,600,466 | 6,879,629 | 2,725,000 | 3,005,975 | 2,599,792 | 6,899,457 |
| (ii) | வாடகைகள் | 28,585,000 | - | 30,103,144 | - | 25,288,600 | | 21,454,260 | - |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 3,248,700 | - | 3,442,528 | - | 2,826,000 | | 3,450,048 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 42,812,000 | - | 89,464,080 | 215,634,685 | 43,392,000 | | 63,403,076 | 193,861,477 |
| | | **772,260,700** | **2,535,003** | **125,610,218** | **222,514,314** | **74,231,600** | **3,005,975** | **90,907,176** | **200,760,934** |

### 2.2.2 வீதவரிகள்

**வீதங்கள்**

ஆதனவரி நிலுவை கூட்டு மொத்தம் ரூபா 10,031,740 அறவிடப்பட்டிருக்க கடந்த 01 தொடக்கம் 54 ஆண்டுகளாகச் சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 வாடகைகள்

**வியாபாரங்களின் உரிமைத்துவம் மீதான குத்தகை**

மீன் சந்தையொன்றினை குத்தகைக்கு வழங்கியமை தொடர்பாக குத்தகைதாரரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய குத்தகை நிலுவை கூட்டுமொத்தம் ரூபா 275,508 தொடர்பில் 02 ஆண்டுகளாக நீதிமன்ற வழக்கு நடைபெற்று வருவது அவதானிக்கப்பட்டது.

### 2.2.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்

மீளாய்வாண்டுக்கான வியாபாரங்களுக்கான அனுமதிப்பத்திரக் கட்டணம் கூட்டுமொத்தம் ரூபா 6,000 அறவிடப்பட்டிருக்க சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) கைவிடப்பட்ட செயற்பாடுகள்**

----------------------------------

மீளாய்வாண்டில் மேற்கொள்வதற்கெனத் திட்டமிடப்பட்டிருந்த ரூபா 198,200,000 பெறுமதியான 50 மூலதன வேலைகள் நிறைவுறுத்தப்பட்டிராது முற்றாக கைவிடப்பட்டிருந்தன.

**(ஆ) திண்மக் கழிவு முகாமைத்துவம்**

-------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) நாள்தோறும் சேகரிக்கப்படுகின்ற கழிவுகள் நறுக்கப்பட்டு மண்தட்டு இடப்பட்டு மூடப்பட்டிருக்கவில்லை.

(ii) கொசுக்கள் நுளம்புகள் பரவுவதனை தடுப்பதற்காக கொசு எண்ணெய் அடித்தல் மற்றும் துர்நாற்றத்தை தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) தேசிய கொள்கைகளின்படி திண்மக்கழிவுகள் தரம் பிரிக்கப்படாமல் சேகரிக்கப்பட்டிருந்தது.

**3.2 மனித வளங்கள் முகாமைத்துவம்**

------------------------------------------

சபையானது உரியவாறு மனித வளத்தைப் பெற்று ஈடுபடுத்தாமையினால் அத்தகைய 12 மனிதவளங்களினால் நிறைவேற்றப்பட வேண்டிய சேவைகள் தாமதமடைந்திருந்தன.

**3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

---------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையின் பண்டத்தரிப்புப் பிரதேச ஆதனங்களுக்கான ஆதனவரி மதிப்பீடு கடந்த 34 ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்கு உரித்தான 14 மயானங்களிற்கு சபையினால் அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தபோதும் மயானவரி அறவிடப்பட்டிருக்கவில்லை.

**3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்**

-------------------------------------------------------------------

உள்ளூராட்சி உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் செயற்திட்டத்தின் நிதியின் மூலம் ரூபா 40,486,686 கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்டு 15 ஆகஸ்ட் 2012 அன்று சபைக்கு கையளிக்கப்பட்ட நூலகத்துடன் இணைந்த தலைமை அலுவலகக் கட்டடம் தொடர்பிலான இறுதிக் கொடுப்பனவினை ஒப்பந்தக்காரருக்கு செலுத்த ஏற்பட்ட கால தாமதம் காரணமாக விதிக்கப்பட்ட கூட்டுமொத்த வட்டி ரூபா 3,401,024 சபை நிதியிலிருந்து ஒப்பந்ததாரருக்கு செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டிருந்ததுடன் வடக்கு மாகாண முதலமைச்சரின் அமைச்சின் செயலாளரினது NP/05/01/PS/VSW/30/02 இலக்கமிடப்பட்ட 06 ஏப்ரல் 2016 ஆம் திகதிய கடித மூலம் அறியக் கொடுத்திருந்தவாறு இவ் அமைச்சின் செயலாளரினால் கடந்த இரு வருடங்களாக பொறுப்பானவர்களிடமிருந்து இவ் வட்டியினை அறவிடுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் தாமதம் அடைந்துள்ளமை அவதானிக்கப்பட்டது.

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.5.1 கையளிக்கப்படாத சொத்துக்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையினால் பயன்படுத்தப்பட்டு வந்த மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சிற்குரித்தான பிக்கப் வாகனமொன்று சபையின் முன்னைய தவிசாளரால் கையளிக்கப்பட்டிராது 2003 ஆம் ஆண்டு சபையின் ஆயுட்காலம் முடிவடைந்த போது எடுத்துச்செல்லப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அவ்வாகனம் நாளதுவரை சபைக்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையின் பயன்பாட்டில் உள்ள உழவு இயந்திரமொன்று சபைக்கு உரித்தற்ற நிலையில் கடந்த 07 தொடக்கம் 16 ஆண்டுகளாக சபையினால் பயன்படுத்தப்பட்டு வந்தது.

**3.5.2 விளைவற்ற சொத்துக்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பிரான்பற்று பிரதேசத்தில் ரூபா 880,625 கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்ட வாராந்தச் சந்தைக் கட்டடத்தொகுதியினைக் கடந்த 02 ஆண்டுகளாக பயன்படுத்துவதற்கேற்ற ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இரு பவுசர்கள் உக்கி பாவனைக்கு உதவாத நிலையில் காணப்படுகின்றன.

**3.5.3 வருடாந்த பொருள் மென்மையாய்வு**

பௌதீக ரீதியாக கிடைத்திராத 182 நூலகப் புத்தகங்கள் தொடர்பாக நாளதுவரை பொறுப்பானவர்கள் மீது ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**பாதீட்டுக் கட்டுப்பாடு**

பாதீட்டு வருமானத்திற்கும் உண்மை வருமானத்திற்கும் இடையே ரூபா 464,181 தொடக்கம் ரூபா 13,183,682 அல்லது 37 சதவீதம் தொடக்கம் 21 சதவீதம் வரையான வேறுபாடுகளும் மதிப்பீட்டு செலவினம், உள்ளபடியான செலவினம் என்பவற்றுக்கிடையே ரூபா 85,984 தொடக்கம் ரூபா 15,850,267 அல்லது 16 சதவீதம் தொடக்கம் 91 சதவீதம் வரையான வேறுபாடுகளும் அவதானிக்கப்பட்டன.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்கு காலம் சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் | குறைபாடுகள் |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | இழப்புப் பதிவேடு, தெரு விளக்குப் பதிவேடு, அளவுத்தாள் பதிவேடு, காணி விற்பனை வரிப்பதிவேடு, வாகன சம்பவத்திரட்டுப் புத்தகம் என்பன பராமரிக்கத் தவறியமை. |
| (ஆ) | ஆதனங்கள் | (i) பாதுகாப்பினை ஸ்தாபிப்பதற்கு தவறியமை.<br>(ii) பதிவு செய்யத்தவறியமை. |